Kavignan

# கவிஞன்

முற்றுமுழுதான மாதாந்தக் கவிதைச் சஞ்சிகை

இனி நீங்களும் விளையாடலாம் மொழியோடு



இதழ்-003 * வைகாசித் திங்கள் 2010

# Kavignan கவி ஞன்

வணக்கம்,

தூய உள்ளங்களின் உயர் உணர்வின் வருவிளைவே கவிதை. கவிதை என்பது இப்படித்தான் அமையவேண்டும் என்று, கவிஞன் உங்களுக்குக் கடிவாளமிட விரும்பவில்லை. அதற்குச் சுதந்திரமளித்து உங்கள் உணர்வுகளை பரிமாணமாக்கி எமக்கு அனுப்பிவையுங்கள். நிச்சயம் இணைத்துக் கொள்ளப்படும்.

உள்ளத்தில் உள்ளது கவிதை
இன்ப உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் ~ உண்மை
தெளிந்துரைப்பது கவிதை

என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கவிதைக் கான கட்டை அவிழ்த்து விட்டிருக்கின்றார். எனினும் விரும்பினால் இப்படியும் எழுதிப் பாருங்கள் என எதிர்காலக் கவிஞன் அன்புடன் ஆலோசிப்பான்.

தனியே எழுதி, நீங்கள் மட்டும் இரசித்துவிட்டு கசக்கி எறியும் கவிஞர்களே! அந்தக் காகிதத்தைமட்டும் கவிஞனுக்கு அனுப்பிவையுங்கள்.

உங்கள் உள்ளத்து வெளிப்பாட்டை உணர்வூர்பமாய் வெளிப்படுத்தக் காத்திருக்கிறான் கவிஞன்.

23.05.2010 ஞாயிறு வீரகேசரியில் 'கவிஞன்' சஞ்சிகை பற்றிக் காத்திரமான விமர்சனம் வளங்கியிருந்த திருமதி.நர்மதி நவேந்திரன் அவர்களுக்கு கவிஞன் தனது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றான்.

உங்கள் எண்ணங்களை எழுத்துக்களாக்கி அனுப்பவேண்டிய முகவரி:

"கவிஞன்"
கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(E.P),
மட்டக்களப்பு,
இலங்கை.

*"KAVIGNAN"*
***Co-op Road,***
***Puthukkudiyiruppu - 5 (E.P),***
***Batticaloa,***
***Sri Lanka.***

**மின்னஞ்சல்:** kavignan@live.com

27.05.2010

அன்புடன்
ஆசிரியர்

# உள்ளே....


- அறிமுகப் புதுமுகம்........................... 03
- இம்மாதப் பிரபலம்........................... 04
- இளம் வயதுத் திருமணம்........................ 05
- இலக்கணக் கவிஞன் ........................... 06
- கவிதைத்துளிகள்........................... 07
- சிந்தனை செய்........................... 08
- கலியாணக் கனவு........................... 08
- பசி . பிரபலங்களின் தோட்டம்.................... 09
- அட்டைப்படக் கவிதை ........................... 10
- அன்னையும் நானும் சில மழை நாட்களும்.... 11
- மேசைக் கிறுக்கல்........................... 12
- நிறைமகள்........................... 13
- வாசகரிடமிருந்து கவிஞனுக்கு .................. 14


## சிந்தனைக்கு...

இதயம் என்பது குப்பைத்தொட்டியல்ல அது விநியோக நிலையம்.

வேதனைகளாலும் கோபத்தினாலும் பொறாமையினாலும் உன் இதயத்தை நிரப்பாதே.

மாறாக மகிழ்ச்சியாலும் நன்மையாலும் நிரப்பு. அதுவே உன் உடலுக்கு ஆரோக்கியத்தை விநியோகிக்கும்.

"ஆரோக்கியமாக வாழ்வதற்கு மருந்தல்ல மனமே பிரதானம்"

– ஜெயராமநாதன் லெதீஸ்ருபன் –

# அறிமுகப் புதுமுகம்



**முழுப்பெயர்:** கயிலைநாதன் ஜெயகணேஷ்
**முகவரி** : 10, கோவிந்தன் வீதி,
திருக்கடலூர்,
திருகோணமலை.
**பிறந்த திகதி** : 09-11-1980
**பொழுதுபோக்கு:** புத்தகங்கள், பாடல்கள், கவிதைகள்
**பகிர்தலுக்கானவை :**
'எதிர்பார்ப்பு தோல்விகளின் ஆரம்பம்'

'கடவுளை நம்பு, மனிதத்திலேயே கடவுள் முழுமையாய் இருக்கின்றான் என்பதை திடமாய் நம்பு'

'வார்த்தைகளிலும் மௌனம்வலியது, மௌனத்தை சரியாக கையாளப்பழகிக்கொள்'

**நேற்று** : வெற்றிகளிலும் தோல்விகளை அதிகமாய் தந்து சென்றது
**இன்று** : பொறுமையை.. நிதானத்தை கற்றுத்தருகின்றது
**நாளை** : இன்னும் புதிய அனுபவங்களையும் வெற்றிகளையும் கொண்டுசேர்க்கும்

**எழுதியவற்றுள் மனதிற்கு நெருக்கமான ஒன்று :**

***வழிதவறிய மேய்ப்பனின் ஆடுகள் நாங்கள்***

நாங்கள்
கருவிலிருந்தே
கசக்கியெறியப்பட்டவர்கள்...
சருகுகளாகவே தளிரானவர்கள்....
கருகிய விதையில் வித்தானவர்கள்...
சிசுவிலேயே சிலுவை ஏறியவர்கள்....
பாவத்திற்காய் பரிசானவர்கள்...
வழிதவறிய மேய்ப்பனின் ஆடுகள்...
தவறறியாமலேயே தள்ளிவைக்கப்படுபவர்கள்....
வேர்களினாலேயே நஞ்சூட்டப்பட்டவர்கள்....
இன்றைய நிலையில்
விஞ்ஞானத்தினாலும் விடுவிக்கமுடியாதவர்கள்....
ஆமாம்
எயிட்ஸ் என்னும் எமனிடம்
தத்துக்கொடுக்கப்பட்டவர்கள்


நாங்கள்....
அசிங்கங்களல்ல...
தொட்டால் தொற்றும் கிருமிகளல்ல...
கொலையாளி வம்சங்களுமல்ல...
பட்டால் பற்றிக்கொள்ளும் சாபங்களல்ல...
உணர்வுகளற்ற சதைபிண்டங்களல்ல...
மறக்காதீர்கள்... நாங்கள்....
சபிக்கப்பட்டதும்...
உருக்குலைந்ததும்...
சிறுகதையானதும்...
இருண்டுபோனதும்...
கந்தலாய்க்கிடப்பதும்...
ஒதுங்கிச்சாவதும்...
உங்களினாலேயே... மறக்காதீர்கள்...

நாங்கள்....
பெரிதாய் எதுவும் கேட்கவில்லை...
வாழும் வரை வாழவிடக் கேட்கிறோம்...
எங்களிடம்...
புன்னகைப்பதால் புண்ணாய்ப்போகமாட்டீர்கள்...
அருகிருப்பதால்... அழுகிவிடமாட்டீர்கள்...
சுவாசம்பட்டால் சுடுகாடு போய்விடமாட்டீர்கள்
எங்கள் எச்சில்கூட ஏதும் செய்யாதுங்களை...

மனங்களையும்.... மனிதத்தையும்....
விசாலமாய்த்திறந்துகொள்ளுங்கள்...
அன்பும்... அரவணைப்பும்...
எங்களையும் தாங்கிக்கொள்ளட்டும்...
எல்லோர்க்கும் பொதுவான உலகில்
வாழும் சில நாட்களும்
வாழ்ந்துவிட்டுப்போகிறோமே
நாங்களும்....

# இம்மாதப் பிரபலம்

## கவிஞர். இ.இரத்தினசிங்கம்



இவரது முழுப்பெயர் இராமலிங்கம் இரத்தினசிங்கம். தாய் அன்னப்பிள்ளை. கவிஞனுடைய தந்தையின் பரம்பரையினர் மிகுந்த கலையார்வம் கொண்டவர்கள்.

இவர் மூதூர் பிரதேசத்தில் உள்ள சேனையூரில் 1956.02.02 இல் பிறந்தார். இங்குள்ள மத்திய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றும் இவர் 1972 இல் தனது கன்னிக் கவிதையை எழுதினார்.

நாற்றுக்கணக்கான மரபுக் கவிதைகளை யாத்த இவர், தற்போது கருத்தாளமுள்ள புதுக்கவிதைகளையும் புனைகிறார்.

வெளிச்சம் பண்பலையில் இவரது கவிதைகள் 'கவிதைக்கோர் கானம்' நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகிக்கொண்டிருக்கின்றன.

சேனையூர் இரா இரத்தினசிங்கம் எனும் பெயரில் வீரகேசரி,தினகரன் போன்ற பத்திரிகைகளில் இவரது கவிதைகள் பிரசுரமாகின.

இவர் கவிஞர் மட்டுமின்றி நாடகாசிரியருமாவார். பாடசாலை தமிழ்மொழித் தினப் போட்டிக்காக பல இலக்கிய நாடகங்களை எழுதியுள்ளார். 1994 இல் இவர் எழுதி நெறிப்படுத்திய 'பாஞ்சாலி சபதம்' எனும் நாடகம் அகில இலங்கை போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டது.

படிப்போரை மீண்டும் மீண்டும் படிக்கத்தூண்டும் கவிதைகள் அடங்கிய இவரது கவிதை நூல் இவ்வருடம் வெளிவரவுள்ளமை மனதுக்கு மகிழ்வைத் தருகின்றது.

முயற்சி வெற்றி பெற நாமும் வாழ்த்துகின்றோம்.

தான் எழுதியதில்த் தனக்குப் பிடித்த கவிதைகளில் ஒன்றாக உறவு என்னும் கவிதையைத் தருகிறார் கவிஞனுக்கு...



# உறவு

ஆண்டவனின் படைப்பிலே
அற்புதங்கள் பல கண்டேன்
அத்தனையும் உண்மையென
அறிந்தேன் இப்போது
கண்களுக்குத் தெரியாத
காரியங்கள் பல நூறு
எண்ணத்தில் தோன்றாத
ஏராளம் பொருள் தருமே
உயிரினங்கள் அத்தனைக்கும்
உறவு எனும் நூல் வேலி
புனைந்தே அதனைப்
புனிதமென வைத்துவிட்டான்

பக்தியெனும் உறவு
பாசமெனும் உறவு
தித்திக்கும் சில உறவு
சித்தம் நிறை உறவு
ஏராளம் உறவுகள்
இருந்தாலும் ஒவ்வொன்றும்
வேறான உணர்வு தரும்
விந்தை இதுவன்றோ
ஆயிரம் உறவுகள்
அரவணைத்த போதினிலும்
ஆயுள்வரை நிலைத்திருக்கும்
அற்புதமாய்ச் சில உறவு...

**கவிஞர்.இ.இரத்தினசிங்கம்**

# இளம் வயதுத் திருமணம்

சின்ன சின்ன பிள்ளைகளே।
சிறகடிக்கும் பறவைகளே।
வண்ண வண்ண வார்த்தைகளை
கேளுங்களே। – உங்கள்
சின்ன வயது திருமணங்கள்
பிழைகளே।

கல்வி வாழ்வை இடைநிறுத்தி
கல்யாணம் செய்வதினால்
கஸ்டகாலம் வந்து சேரும்
கேளுங்களே। – உங்கள்
எதிர்காலம் இருளடையும்
பாருங்களே।

வாழுகின்ற மக்களுக்கு
வாழ்ந்தவர்கள் பாடமென்று
பாட்டு தந்த கவிஞர் கதை
கேளுங்களே – உங்கள்
வாழ்வு மலர நீங்கள்
பாடு படுங்களே।

**கதிரவன்**
**புதுக்குடியிருப்பு**

# இலக்கணக் கவிஞன்

ஒரு கவிஞன் தன் மொழிவளம் பெருக்கிக்கொள்வது அவனது கவிதைகளின் விலாசத்தை விசாலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான பவணந்தி முனிவர் இயற்றிய "நன்னூல்" விளக்கவுரையுடன் இவ் இலக்கணக் கவிஞன் பகுதியினூடாக வாசகர்களுக்காக தரப்படுகின்றது.

## எழுத்தின் பெயர்

**சூத்திரம் 63**

**அம்முத லீரா றாவி கம்முதன்**
**மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்**

தமிழ் நெடுங்கணக்கிலுள்ள அகரம் முதலிய பன்னிரண்டினையும் உயிரெழுத்து என்றும், ககரம் முதலிய பதினெட்டினையும்மெய்யெழுத்தென்றும் கூறுவர்.

பன்னிரண்டு உயிரெழுத்தும் உயிர்போல தனித்து இயங்குவதால் உயிரெழுத்து என்றும், பதினெட்டு மெய்யெழுத்துக்களும் உயிரின்றி தனித்து இயங்கமாட்டாமையால் மெய்யெழுத்து என்றும் அழைக்கப்படுகின்றன.

உயிர் (உ-ம்) அ,ஆ,இ.......
மெய் (உ-ம்) க்,ஞ்,த்,ட்,ய்.....

**சூத்திரம் 64**

**அ இ உ எ ஒக்குறி லைந்தே**

உயிரெழுத்துப் பன்னிரண்டில் அ,இ,உ,எ,ஒ ஆகிய ஐந்து எழுத்துக்களும் குறில் எழுத்துக்களாகும். இவை குற்றெழுத்து என்றும் அழைக்கப்படும்.

**சூத்திரம் 65**

**ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்**

ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ ஆகிய ஏழு எழுத்துக்களும் நெடில் எழுத்துக்களாகும். இவை நெட்டெழுத்து என்றும் அழைக்கப்படும்.

# கவிதைத் துளிகள்

**அம்மா!**
**உனைப் பற்றி**
**எழுத நினைக்கையில்**
**பேனா முனை குற்றி – காகிதம்**
**கிழிந்து போவதைத் தவிர**
**வர்ணிக்க வார்த்தையின்றி**
**தோற்றுப் போகிறது என் பேனா**

-கவிஞன்-

**ஆயிரம் வார்த்தைகளில்**
**அன்னை பற்றி**
**எழுதச்சொன்னார்கள்**
**மூன்று எழுத்துக்களில்**
**எழுதி முடித்தேன்.**

தாசன் சுமன்
ஊறணி,

**உன் நினைவுகளை**
**இணைத்துக் கட்டிய கூட்டில்**
**மனம்**
**காதலை அடைகாக்கிறது**
**இனியும் அழாதே!**

சுகிர்தராஜன்.
தாதிய கல்லூரி,
மட்டக்களப்பு.

**விடியலைத்தேடி**

மண்ணிலே மன்னில் வாழ்வதென்றே
பிறந்தேன் பெண்ணாய்
பால்முகம் காட்டி அழுதேன்
என் விடியலைத்தேடி
உணர்வுள்ள பெண்ணாய்
உண்மையைப் புரிந்துகொண்டேன்!

**நில்! கவனி! முன்னேறு!**

பாரதி படைத்த புதுமைப் பெண்ணே!
பாரடி நிமிர்ந்து உன் விடிவை
உலகம் உருட்டும் நீ துவண்டிடாதே!
எழுந்து நில் இந்த
சீர்கெட்ட சமுதாயத்தில்
வாழத்தானே நீ பிறந்தாய்!
சோகத் தீயில் ஏன் கலந்தாய்?
உன் குழந்தை
தாய்முகம் தேடித் தவிக்கிறது.

**செல்வி.ந.நிதர்சினி**
**மட்டக்களப்பு.**

# சிந்தனை செய் ...!

அன்புள்ள சிநேகிதியே...
எந்தன் ஆருயித் தோழியே...
உன் சீவியம் சிறப்பாய் அமைய
சிந்திப்பாய் தினமும் இங்கே.
அஞ்ஞான முடிச்சுக்குள்
இறுகிக் கிடக்கும் உந்தனது
உணர்வுகளை
ஒளி நிரம்பிய உணர்வுகளாக
உருவாக்கி எடுப்பதற்கு
சிந்தனை ஒன்றே
உனக்குரிய ஒரே
வழியடி இங்கே...
அதனால்த் தான்
விழித்தெழு என்கிறேன்
விந்தை செய்ய எழு என்கிறேன்.
காரிருளுக்குள் வாழுமட்டும்
உனக்கு காசினியில்
எதுவுமே விளங்காது
கல்வி ஒளி பெறுவதன் மூலமே நீ
காரிருள் அனைத்தையும் வென்று
காவியம் படைக்கும் காரிகையாய் நீ
புத்தொளி வீசலாம்...
உனக்கு விலங்கினை
முதலிலே இட்டது நீதான்...
உன் சிந்தனை இனி இங்கே வளரட்டும்
பண்பாட்டில் உயர்ந்த பெண்ணாய்
உன்னை அது இனி ஆக்கட்டும்.

திருமதி.நுர்மதி நவேந்திரன்
பாண்டிருப்பு- 01

# கலியாணக் கனவு

காகங்கள் கூடி
கலைகிறது கரைந்து
மணலை மீன் வெட்டிய
மாமியின் வீட்டிற்குள்!

தட்டு வேலியின்
ஓரமாய் ஒட்டி
எட்டிப் பார்க்கிறேன்
என்னவளைத் தேடி!

மீன் மிச்சம் தின்ற
சொறிநாயும் பூனையும்
முறைக்கிறது என்னை
முட்டாளே என்று!

விசிலடித்துத் தெரிவித்தேன்
என்வரவை
சட்டி முட்டிகளை
கழுவுகின்ற சாட்டில்
முருங்கை மரத்தடியில்
குந்தினாள் என் குட்டி

தாலிக் கொடியும்
சப்பாத்தும்
கூறையுடன் பாவாடையும்
வாங்கியதை உரைத்தேன்!

ஆவணிமாதம்
வருகிறது நாளொன்று
ஆடிமாத இறுதியிலே
பெண்பார்க்க வாருமென்றாள்!

தையலவள் சொல்லாலே
மையல் அதிகரித்து
கட்டினேன் பொன்தாலி
கனவிலே நேற்றிரவு

**செல்லப்பா சுரேன்.**
**இல 10,**
**அன்னமலை-2,**
**கல்/முனை.**

# பசி

வறுமைக் கோட்டில்
வாழ்க்கை சுழன்றதால்
சிறைப்பட்டுப் போனது அவள்
திருமணம் சீதனத்திற்குள்!

கறை பட்டவள் போல்
இச் சமுதாயம் அவளை
குறைகூறித் திரிகிறது
கொச்சை மொழியில்!

முதலில் அப்பா பின் அம்மா
விதியின் அழைப்பிற்கு!
மிதிவெடியில் காலிழந்த சோதரர்
மதியிழந்த நிலையிலே அறையில்
கதியின்றியவள் கலங்கிநின்றாள்

பசிவடிவில் வறுமை
வயிற்றைச் சுரண்டுகின்றது
புசிக்க வழிதேடி
கசிந்த விழிகளுடன் அவள்...

பணக்காரர் ஒருவர் வீட்டில்
வேலைக்காரி ஆனாள்

பணக்காரரோ அவர்
உடல் பசி போக்க
பணத்தைக் காட்டி அவள்
இடுப்பைச் சுரண்டுகிறார்.

திருமதி.லோகேஸ்வரி கிருஸ்ணமூர்த்தி
நெசவு நிலைய வீதி,
அக்கரைப்பற்று.

# பிரபலங்களின் தோட்டம்

பார்த்துப் பார்த்து
பக்குவமாய் ஒரு பயிர்வளர்த்தேன்
விளைச்சலும் கண்டது அமோகமாய்
விற்பனையோ
போகவில்லை சுமூகமாய்

இலட்சமாய் பிரிந்து - பின்
சுக்குநூறானேன் ஒவ்வொன்றாய்

என்ன அதிசயம்!
பிரபலங்களின் தோட்டத்தில்
பிஞ்சாய்ப் பிறந்தாலும்
பதராய்ப்போனாலும்
கேட்கிறார்கள்
'நன்றாயிருக்கிறது
நாலைந்து தாருங்கள்'

பின்புதான் புரிந்தது
தெரிவு செய்ய தேர்ச்சி பெறா
மக்கள் விரும்புவது
விளைச்சலையல்ல
விவசாயிதான் என்று.

– கவிஞன் –

# அட்டைப்படக் கவிதை

*சர்வதேச அன்னையர்தினம் வைகாசி மாதத்தின் 2வது ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகின்றது.*

வெண் பரிசுத்த முத்தம்
உன் மடியென்ற சொர்க்கம்
உன் உள்ளங்கை வெப்பம்
உயிரில் மழை செய்யும் நுட்பம்
இவை நான்கும் போதும்
நான் உன்னால்
வாழ்ந்துவிட்டதை நிரூபிக்க...!

*த.ஸதீஸ்காந்*
*394/56,*
*திருமலைவீதி,*

வரம் ஒன்று தா இறைவா..!
கருவறை முதல் என் கல்லறைவரை
தாயவள் நிழல் வேண்டும் எனக்கு..
என்னாயுள் நீள வேண்டாம்
அவளாயுள்வரை தந்தால்போதும்..

*கயிலைநாதன்*
*ஜெயகணேஷ்*
*திருகோணமலை.*

தாய்மையைத் தந்து
தலைநிமிர வைத்த
பாவையை நினைந்து
சிந்தை குளிருந்தாய் - எதிர்
காலத்தை நினைந்து
மார்போடணைத்து
காப்பதற்கு நீயும்
வளிதேடுகின்றாய்

*வியாசர்*
*புதுக்குடியிருப்பு*

**அனைத்து அன்னையர்களுக்கும்**
**கவிஞனின் பாசங்கலந்த**
**அன்னையர் தின வாழ்த்துக்கள்**



அடுத்த மாதம் அட்டைப்படமாகவுள்ள இப் படத்தைப் பிரதிபலிக்கும் உங்கள் எண்ணங்களை கவிதையாக்கி எமக்கு எழுதியனுப்புங்கள்

# அன்னையும் நானும்
# சில மழை நாட்களும்...!


பிரசவ வேதனையில் துடித்தவாறே
மரணத்தின் எல்லைக் கோட்டில்
நின்றுகொண்டு தன் குழந்தைக்கும்
இப்படி வலிக்குமோ? என
விழி நீர் கசிந்திடும்
உன்னத உறவாய்
உன்னைத் தவிர யார் உண்டு?
இந்த உலகில்!

நொடிக்கு நொடி மாற்றங்கள் நிகழும்
இந்த விஞ்ஞான உலகில் - நான்
இரண்டே தடவைகள் புரண்டு படுத்தாலே
என் நெற்றி தொட்டுப் பார்க்கும்
உன் விரல்கள் மட்டும்
அதே மாறா ஈரத்துடன்!

நாம் காணும் எந்தவொரு கனவும்
இரு நிமிடங்களுக்கு மேல் நீடிக்காது
இதுவெரு விஞ்ஞானக் குறிப்பு!
ஆனால் நீ மட்டும் எப்படி-என் முன்னே
இருபத்தி நான்கு வருடங்களாய்?

உலகில் அழகானது எது தெரியுமா?
பிரசவம் கடந்து
தன் குழந்தையை முதன் முதலாய்ப்
பார்த்ததும் ஒரு காலைப் பனிமலராய்
மலர்கின்ற தாயின் முகம்தான்!

த.ஸதீஸ்காந்,
394/56 திருமலை வீதி,
மட்டக்களப்பு.




இப்பகுதி ஒரு வித்தியாசமானதாக அமையலாம். இதற்காக நாங்கள் கவிஞர்கள் உருவாக்கப்படும் ஆரம்ப இடமாகிய வகுப்பறை மேசை~களை நாடவேண்டியிருந்தது. அங்கு பெற்றுக்கொண்ட சில கிறுக்கல்களே இவை. சில மிகவும் உணர்புவூர்வமானவை. முகம்தெரியா கவிஞர்களின் சில முத்துச் செதுக்கல்கள் சில..........

உன் நினைவுகள் புதையல்போன்றது
அது காலத்தால் திருடப்படாதவாறு - என்
மனப் பூதம் காத்து நிற்கிறது
- சந்தோஸ் -

உனது காதல்...
அடிக்கடி பாதை மாறும்-வாகனம்
காம உணர்வை வெளிப்படுத்தும் - ஊடகம்
எப்போதும் இணையாத இரு - தண்டவாளம்
கலக்கப்பட்ட இரு உலோகங்களின் - கலப்பு

உள்ளங் கையளவுதான் இதயம் - அதில்
உயிருடன் உலா வருகிறது உன் - விம்பம்
கவனம் கால் தடக்கி வீழ்ந்திடக் கூடும்- இவள்
இதயம் கலங்கிவிடக் கூடும்.

# நிறைமகள்

-வேதமூர்த்தி-

மன்னர் நிகர்த்தவர்
மானாய்க்கர் அவர்
மைத்துனர் மாசாத்த வர்த்தகர்
வித்தகர் இருவரின் சொத்துக்கள்
விளம்பிட வார்த்தைகள் சூத்தை
முத்தத்தின் சாகரம் மெத்தத்தில்
நித்தமும் பிரிந்தது முற்றத்தில்

ஏழைக்கும் பாளைக்கும்
இவர்கள்
எடுத்துக் கொடுத்தவை ஏராளம்,



பொன்னுக்கும் பொருளுக்கும்
மேலாய்
புகழ் பரப்பிடப் பிறந்தனர்
புதல்வோர்,
கண்ணகி மாநாய்க்கன் கன்னி
காளையோ மாசாத்தான் சென்னி
மண்ணுக்குள் வைரமாய் வளர்ந்தாள்
அந்த
மறு இல் மாங்கனி மாது
கண்ணின் கண்ணவள்
வண்ணமோ கண்ணினை வாங்கிடும்
பெண்ணுக்கு இலக்கணம் ஏது
இங்கே பிறந்தது
கண்ணகி பேரால்.

(தொடரும்...)



# வாசகரிடமிருந்து கவிஞனுக்கு

உங்கள் விமர்சனங்கள், கருத்துக்கள் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன. ஒரு கலைஞனுக்கு விமர்சனங்கள் மிக முக்கியமான தூண்டுகோலாக அமைவதுடன் அவனைப் புடமிடுவதும் உங்களிடமிருந்து வரும் விமர்சனங்களே. உங்கள் வாழ்த்துக்கள் படைப்பாளிகளுக்காய் அமையட்டும். விமர்சனங்கள் கவிஞனுக்காய் மலரட்டும்.

'கவிஞன்' இரண்டாவது இதழ் கற்றேன். அத்தனை விடயங்களும் முத்துக்கள். இலக்கிய வானில் முழுமதியாய் உலவ வாழ்த்துக்கள். 'இலக்கணக் கவிஞன்' அம்சம் பற்றிச் சில வரிகள் 'உயிர்மெய்யிரட்டு...' எனும் நன்னூல் சூத்திரம் பிரசுரமானது. அதன் தலைப்பு 'சார்பெழுத்தின் விரி' சூத்திரம்(61) இவ்வாறு சூத்திரத் தலைப்பையும் இலக்கத்தையும் குறிப்பிடல் வாசகரின் தேடலுக்கு வளமூட்டும்.

**திருமதி.ஜெகதீஸ்வரி நாதன்**
**(தம்பிலுவில் ஜெகா)**

'கவிஞன்' பெயர் கொண்டு
கையில் கிடைத்தது இதழொன்று
மெய்யாய்க் கொண்ட ஆவலினால்
செய்தி அறியக் கவிஞனின்

முன்னட்டை பிரட்டி
உள்ளே நுழைந்து
பின்னட்டை வரை சுவைத்து
கள்ளமேதுமின்றிப் பாராட்டுகின்றேன்.


ஆசிரியர் முயற்சி மனதில் மகிழ்ச்சி
களமாகும் விதத்தில்
கருத்துத் தேர்ச்சியுடன்
கவிதைப் பயிற்சி!

விடாமுயற்சியுடன்
வளர்ந்து உயர்ச்சி பெற
வாழ்த்துகிறேன் கவிஞனை
மன மகிழ்ச்சியுடன்!

**லோகேஸ்வரி**
**அக்கரைப்பற்று**

---

## கவிதை நூல் அறிமுகம்




நூல் : கவிதைகள் பேசட்டும் (பெண்கள் கவிதைத் தொகுதி)
தொகுப்பு : சித்திரலேகா மௌனகுரு
முகவரி : சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.
இல:20.டயஸ் ஒழுங்கை.
மட்டக்களப்பு.
வெளியீடு : சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
முதற் பதிப்பு : பங்குனி 2010
விலை : ரூபாய் 125.00

## சிவா மல்டி கொம்லக்ஸ்

**பிரதான வீதி,புதுக்குடியிருப்பு. (பாடசாலைக்கு அருகாமையில்)**

பாடசாலை உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள் . போட்டோப் பிரதி லெமினேற்றிங் கொம்பியூட்டர் ப்பிரின்டிங் ஸ்கேனிங் **Internet & E-Mail** சேவை விளையாட்டுப் பொருட்கள்.பரிசுப்பொருட்கள். வாழ்த்தட்டைகள். புக் வைண்டிங் **VCD, DVD Writing**

மற்றும் **Mobitel ,Dialog Reload**

**Dialog, Mobitel, Suntel, SLT net, SLT Passport** போன்ற அனைத்து முற்கொடுப்பனவு அட்டைகளும் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்



தொடர்புகளுக்கு : *0770452861 . 0653641247*

***E- Mail : psnraj@yahoo.com***






மாதாந்தம் நீங்களும் கவிஞன் சஞ்சிகையினைப் பெற மற்றும்

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்

077 36 20 328

**அனைத்துத் தொடர்புகளுக்கும்:**


*ஆசிரியர்,*
*'கவிஞன்' சஞ்சிகை,*
*கூட்டுறவுக் கடை வீதி,*
*புதுக்குடியிருப்பு - 5 (E.P),*
*மட்டக்களப்பு,*
*இலங்கை.*


அனைத்து ஆக்கங்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்